பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.51** **நாள் : 05.03.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து வரி சம்பந்தப்பட்ட வழக்குகளை சமரசம் மூலம் தீர்வு காண தேசிய மக்கள் நீதிமன்றம் நடைபெற உள்ளது.**

மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து வரி சம்பந்தப்பட்ட வழக்குகளை சமரசம் மூலம் தீர்வு காண மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வருகின்ற **09.03.2019 (சனிக்கிழமை)** அன்று **தேசிய மக்கள் நீதிமன்றம் (National Lok Adalat)** நடைபெற உள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி சம்பந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து சமரசம் மூலம் தீர்வு காண விரும்பும் பொதுமக்கள் **07.03.2019** (வியாழக்கிழமை) மற்றும் **08.03.2019** (வெள்ளிக்கிழமை) ஆகிய நாட்களில் அலுவலக நேரங்களில் ரிப்பன் மாளிகையில் உள்ள வருவாய் அலுவலர், வருவாய் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**